நிருபர்கள் தேவை
புதுவை மற்றும் தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுக்கா வாரியாக நிருபர்கள் தேவை
தொடர்புக்கு
9944470502

ஊராட்சி மலர்
OORATCHI MALAR
ऊराची मलार
தேசிய காலை நாளிதழ்
OORATCHI MALAR - MULTILINGUAL MORNING DAILY
சிவகங்கை பதிப்பு ( SIVAGANGAI ) • THURSDAY, JULY 30, 2026
ஆசிரியர் : மு.பாண்டியராஜன்
RNI No.TNMUL2023/89277 R.DIS.NO.11788/2022 Vol.4 NO.203
• Printedat: SIVAGANGAI
• 4 பக்கங்கள் ₹ 5

மாலையில் படியுங்கள்
தேசிய மலர்
மாலை நாளிதழ்

### பல்வேறு முறைகேடு புகார் எதிரொலி:

# கரூரில் உள்ள செந்தில் பாலாஜி வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை!

## குதிரை பேரத்தில் கைதான 2 ஆதரவாளர் வீடுகள், டாஸ்மாக் மேலாளர் அலுவலகத்திலும் வேட்டை!!



தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் சென்னை தலைமைச் செயலகத்தில், மனித வள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், தொகுதி பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 78 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கள் சரத்குமார், ராஜீவ், தலைமைச் செயலாளர் சாய்குமார், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சமயமூர்த்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் அனுராக் மிஷ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கரூர், ஜூலை.30**

கரூரில் 5 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டார்கள். அந்த வகையில் செந்தில் பாலாஜியின் வீடு, குதிரை பேரத்தில் கைதான 2 ஆதரவாளர்களின் வீடு, டாஸ்மாக் அலுவலகங்கள் ஆகியவற்றில் இந்த சோதனை நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அவர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்.

அப்போது போக்குவரத்துத் துறையில் பணியாளர்களை சேர்ப்பதில் முறைகேடு நடந்ததாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சராக பணியாற்றினார். இந்த சமயத்தில் டாஸ்மாக்கில் ரூ.1,000 கோடி வரை ஊழல் நடந்ததாகவும், மின் மாற்றிகளை வாங்கியதில் ரூ.397 கோடி முறைகேடு நடந்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

தற்போது த.வெ.க. அரசை கவிழ்க்க குதிரை பேரம் நடந்ததாக செய்தி வெளியானது. இதிலும் செந்தில் பாலாஜியின் பெயர் இடம் பெற்றது. அவரும், அவரது தம்பி அசோக்குமாரும் இந்த சதித்திட்டத்தின் பின்னணியில் இருப்பதாக கூறப்பட்டது.

இதையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவின்படி அந்த இருவரும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் தினமும் ஆஜராகி கையெழுத்திட்டு வருகிறார்கள். இந்த எம்.எல்.ஏ. குதிரை பேர சம்பவத்தில் கரூரைச் சேர்ந்த செந்தில் பாலாஜியின் 2 ஆதரவாளர்கள் உள்பட 10–க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் செந்தில் பாலாஜியின் வீடு, அவரது ஆதரவாளர்களின் வீடுகள், டாஸ்மாக் தொடர்புடைய அலுவலகங்கள் ஆகியவற்றில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று அதிகாலை திடீரென சோதனையில் இறங்கினர்.

கரூரில் ராமேஸ்வரபட்டியில் உள்ள தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடு உள்ளிட்ட இடங்களில் நேற்று காலை 7 மணி முதல் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். போலீஸ் பாதுகாப்புடன் 10க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

மண்மங்கலம் அருகே உள்ள செந்தில் பாலாஜியின் பூர்வீக வீடு, மூர்த்திபாளையத்தில் அமைந்துள்ள அவரது உதவியாளர் சுப்பிரமணி வீடு, திமுக தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் பாஸ்கரன் வீடு மற்றும் கோதை நகர் பகுதியில் உள்ள கடந்த 1–ஆம் தேதி கைது செய்யப்பட்ட கார்த்தி, ரமேஷ் ஆகியோரின் வீடுகள் உட்பட மொத்தம் 5 இடங்களில் திருச்சியிலிருந்து வந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கரூர் தொழிற்பேட்டையில் உள்ள டாஸ்மாக் மேலாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் லஞ்ச ஒழிப்பு சோதனை நடந்து வருகிறது. செந்தில் பாலாஜியின் பெற்றோரிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. எதன் அடிப்படையில் இந்த சோதனை நடந்து வருகிறது என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

சோதனையின் முடிவிலேயே முழு விவரமும் தெரியவரும்.

### சிறிது நாள் அமைதிக்கு நடுவே

# அமெரிக்க ராணுவ நிலைகள் மீது ஈரான் திடீர் ஏவுகணை வீச்சு !

## ★ உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்; ★ கப்பலில் 13 இந்தியர்கள் சிக்கித்தவிப்பு!!

**டெக்ரான், ஜூலை.30–**

வளைகுடாவில் சில தினங்களாக அமைதி நிலவி வந்த நிலையில் திடீரென அமெரிக்க ராணுவ நிலைகள் மீது ஈரான் சரமாரியாக ஏவுகணைகளை வீசி உள்ளது. அதே நேரத்தில் உக்ரைன் மீதும் ரஷ்யா கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. இதில் ஒரு கப்பல் தாக்கப்பட்டது. அதில் 13 இந்திய மாலுமிகள் சிக்கித் தவிக்கின்றனர்.

அமெரிக்கா – ஈரான் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் முறிந்ததையடுத்து வளைகுடாவில் மீண்டும் மோதல் வெடித்தது. ஈரான் மீது தொடர்ச்சியாக 2 வார காலம் அமெரிக்கா கடும் தாக்குதல் நடத்தியது.

இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்தது. இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா திடீரென தாக்குதலை நிறுத்திக்கொண்டது. இதனால் சற்று அமைதி திரும்பியது. இந்த நிலையில் நேற்று திடீரென வளைகுடாவில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் சரமாரியாக ஏவுகணைகளை வீசியுள்ளது. அப்பகுதியில் இருக்கும் அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியதாக அமெரிக்க மத்திய கட்டளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க ராணுவம் கூறுகையில், "இந்த தாக்குதல் திடீர்தாக்குதலாக நடத்தப்பட்டது. இருப்பினும், ஏவப்பட்ட அனைத்து ஏவுகணைகளும் வெற்றிகரமாக இடைமறிக்கப்பட்டன. உயிரிழப்போ, சேதமோ ஏற்படவில்லை. அமெரிக்க படைகள் தொடர்ந்து ஹை அலர்ட் மோடில் தான் இருக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜோர்டானில் உள்ள ராணுவ தளத்தை குறிவைத்தே ஈரான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவலை அமெரிக்கா வெளியிட மறுத்துவிட்டது.

இது ஒருபுறம் இருக்க உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா கடந்த சில நாள்களாக தாக்குதலை அதிகப்படுத்தி உள்ளது. நீண்ட தூர ஏவுகணைகளையும், டிரோன்களையும் ஏவி கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. சில தினங்களுக்கு முன்னர் உக்ரைன் நாட்டின் ஒடீசா துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட சரக்கு கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 4 இந்திய மாலுமிகள் உள்பட 10 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் இப்போது உக்ரைன் நாட்டின் குரோனோ மார்ஸ்க் என்ற துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பல் மீது குண்டு வீசப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 15 மாலுமிகள் இருந்தனர். அவர்களில் 13 பேர் இந்தியர்கள்.

இந்த கப்பல் தீப்பிடித்து எரிந்தது. ஆகவே அந்த மாலுமிகளை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

### குற்றம் சாட்டப்பட்டவரே மனுதாக்கல்:

# குதிரை பேர வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும்!

## மத்திய—மாநில அரசுகள் பதில் தர சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!!

**சென்னை, ஜூலை.30–**

குதிரை பேர வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரி, குற்றம் சாட்டப்பட்டுள்ள ரமேஷ் என்பவர் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி மத்திய – மாநில அரசுகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குதிரை பேரம் நடத்தியதாக ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜா அளித்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ரமேஷ் என்பவருக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று ஜாமின் வழங்கி உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கை மாநில போலீசார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது என கூறி விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என ரமேஷ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராகவாச்சாரி, உடற்பயிற்சி நிலையம் நடத்தி வரும் மனுதாரரை சம்பந்தம் இல்லாமல் இந்த வழக்கில் கைது செய்து 15 நாட்கள்சிறையில்அடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மற்றவர்களிடம் தொலைபேசியில் பேசினார் என்பதற்காக மனுதாரருக்கு எதிராக இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநில காவல்துறையினர் விசாரணையில் நம்பிக்கை இல்லை என்பதால் இந்த வழக்கை சிபிஐ அல்லது வேறு ஏதேனும் விசாரணை அமைப்புக்கு மாற்ற வேண்டும்.

எந்தவித வாரண்டும் இல்லாமல் மனுதாரர் வீட்டில் சோதனை நடத்திய போலீசார், ஒரு லட்சத்து மூன்று ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்துள்ளனர் என்று வாதிட்டார்.

காவல்துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜான் சத்யன், 10 எம்எல் ஏக்களை விலைக்கு வாங்க பேரம் பேசப்பட்டுள்ளது. இந்த குற்றச்சதியில் மனுதாரருக்கு தொடர்பு உள்ளது. இதுவரை இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பொய் வழக்கு ஜோடிக்க அவசியம் இல்லை. ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், வழக்கின் புலன் விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளதால் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மனுவுக்கு நான்கு வாரங்களில் பதிலளிக்கும்படி மத்திய – மாநில அரசுகளுக்கும் சிபிஐ க்கு உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர். மேலும் மனுதாரர் ரமேஷுக்கு எதிரான வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

### 23 ஆண்டுகளுக்குப்பிறகு மாற்றம்:

# டாஸ்மாக் கடைகளை தனியார் மயமாக்க தமிழக அரசு முடிவு!

## நகர்ப்புற பகுதிகளில் முதற்கட்டமாக திட்டம் அமல்!!

**சென்னை, ஜூலை.30**

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் கடந்த 23 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபான கடைகளை பல்வேறு கட்டமாக தனியார்மயமாக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகள் தனியார் மூலம் இயக்கப்பட உள்ளன. இதற்காக தமிழ்நாடு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்யவும், அதற்கான மசோதாவை வரவிருக்கும் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் தாக்கல் செய்யவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் டாஸ்மாக் நிறுவனம் 2003ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டது. அதன்பிறகு கடந்த 23 ஆண்டுகளாக மதுபான சில்லறை விற்பனையை அரசே நேரடியாக மேற்கொண்டு வருகிறது. தற்போது மாநிலம் முழுவதும் 4,048 டாஸ்மாக் சில்லறை மதுபானக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

மாநில அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரும் நிறுவனங்களில் டாஸ்மாக் முக்கிய இடம் வகிக்கிறது. 2024 –25ம் நிதியாண்டில், டாஸ்மாக் மூலம் கலால் வரி மற்றும் மதிப்பு கூட்டு வரி (வாட்) ஆகியவற்றின் வாயிலாக ரூ.48,344 கோடி அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது. இதுதவிர, மதுபான உற்பத்தியாளர்கள் மற்றும் சப்ளையர்களிடம் வசூலிக்கப்படும்உரிமக்கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வருவாய்களும் அரசுக்கு கிடைத்து வருகின்றன.

அரசே நேரடியாக மதுபான விற்பனையை மேற்கொள்வதால், டாஸ்மாக் கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை (எம்.ஆர்.பி.) மீறி விற்பனைசெய்வது உள்ளிட்ட புகார்களுக்கும் அரசே நேரடியாக பதிலளிக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. மேலும் மதுவிலக்குக் கோரி போராடும் போதும் அது அரசுக்கு எதிரான போராட்டமாகவே அமைந்தது.

டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனையை அரசே நேரடியாக நடத்தி வரும் சூழலில், இது ஒரு அரசுக்கு கண்ணியக் குறைவை ஏற்படுத்துவதாக த.வெ.க. அரசு கருதுகிறது. இதனால் சில்லறை மதுபான விற்பனையில் இருந்து அரசு படிப்படியாக விலகி, உரிமம் வழங்கும் அமைப்பாக மட்டும் செயல்பட திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நடவடிக்கை டாஸ்மாக் கடைகளைமுழுமையாகமூடும் அரசின் நீண்டகால நோக்கத்திற்கான முதல் படியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

மதுபானக் கடைகளை தனியார்மயமாக்கும் திட்டம் அமலுக்கு வந்ததும், முதல் கட்டமாக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வரும் சுமார் 2,500 டாஸ்மாக் கடைகள் தனியார் நிறுவனங்கள் மூலம் இயக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கி மதுபான கடைகளை நடத்த அனுமதி அளிக்கப்படும். இந்த முறை ஏற்கனவே கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைமுறையில் உள்ள திட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டு அமல்படுத்தப்பட உள்ளது.

மதுபான விற்பனையை தனியார் மயமாக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தால், இதில் அரசின் நிர்வாகப் பொறுப்புகள் குறைவதுடன், உரிமம் மற்றும் வரி வசூல் மூலம் அரசின் வருவாய் தொடர்ந்து உறுதி செய்யப்படும் என அரசு தரப்பில் கருதப்படுகிறது. இதற்கான சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, நகர்ப்புற பகுதிகளில் முதற்கட்டமாக மதுபானவிற்பனைதனியார்மயமாக்கும் நடைமுறை அமல்படுத்தப்படும்.

அதன் செயல்பாட்டின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரிவாக்கம் செய்வது குறித்து அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும் என்று கூறப்படுகிறது. மக்களுக்கான ஒரு அரசே நேரடியாக மதுபான சில்லறை விற்பனையை நடத்துவது மரியாதை கிடையாது. மதுபானங்களை விற்பனை செய்வது ஒரு அரசின் வேலை அல்ல என்பதையே தனியார்மய முடிவுக்கான முக்கிய காரணமாக அரசு தரப்பில் கூறப்படுகிறது.

அந்த வகையில் சட்டத் திருத்த மசோதா வரவிருக்கும் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதுபானவிற்பனையைஅரசே நேரடியாக மேற்கொள்வதால் ஏற்படும் நிர்வாகச் சுமையைகுறைப்பதோடு, உரிமக் கட்டணம் உள்ளிட்ட வழிகளில் அரசின் வருவாயை தொடர்ந்து உறுதி செய்வதே இந்த மாற்றத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

அதே நேரத்தில், டாஸ்மாக் கடைகளின் செயல்பாடு, விற்பனை நடைமுறை மற்றும் வருவாய் வசூல் முறையில் இந்த மாற்றம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சிறப்பு அந்தஸ்து சட்டத்தை மீண்டும் கோரி காஷ்மீரில் ஆக. 5 –ஆம் தேதி போராட்டம்!

## முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி அறிவிப்பு!!

**ஸ்ரீநகர், ஜூலை.30–**

காஷ்மீர் மாநில சிறப்பு அந்தஸ்து சட்டப் பிரிவுகளை மீண்டும் கொண்டு வர வலியுறுத்தி, ஜம்மு காஷ்மீர் முழுவதும் ஆகஸ்ட் 5–ஆம் தேதி அமைதியான முறையில் மாவட்டத் தலைநகரங்களில் போராட்டம் நடத்தப்படும் என்று மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வருமான மெகபூபா முப்தி அறிவித்துள்ளார்.

ஸ்ரீநகரில் நடைபெற்ற மக்கள் ஜனநாயகக் கட்சியின் 27 –ஆவது நிறுவன நாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், ஜம்மு காஷ்மீரின் அரசியல் அமைப்பை மாற்றியமைத்த ஆகஸ்ட் ஐந்தாம் தேதியை நினைவுகூர்ந்தார்.

மேலும், பிராந்தியத்தின் சிறப்பு அந்தஸ்து, மாநில வளர்ச்சி மற்றும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை கட்சி தனது போராட்டத்தைத் தொடரும் என்று அவர் தெரிவித்தார்.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் வர்த்தகப் பாதைகளைத் திறப்பது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது மற்றும் ஷார்தா பீடம் வழித்தடத்தைத் திறப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் இக்கூட்டத்தில் கட்சி வலியுறுத்தியுள்ளது.

## ஆலங்குளம் அருகே

# இடைகால் ஸ்டஅக் ஹைடெக் பள்ளியில் மாவட்ட அளவிலான போட்டிகள்!

### சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை!!



**ஆலங்குளம், ஜூலை.30–**

ஆலங்குளம் அம்பாசமுத்திரம் சாலையில் அமைத்துள்ள இடைகால் ஸ்டஅக் ஹைடெக் பள்ளி மாவட்ட அளவிலான பத்தாம்ஆண்டுவிளையாட்டு போட்டிகள் கடந்த வாரம் மெரிட் கல்லூரி வைத்து நடைபெற்றது. இந்த போட்டிகளில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் இருந்து 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இடைகால் ஸ்டஅக் ஹை டெக் பள்ளி மாணவர்கள் இவற்றில் பங்கேற்று பள்ளிகளுக்கான ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றனர்.

19 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் செல்வகுமார் நீளம் தாண்டுதல் மற்றும் மும்முறை தாண்டுதல் ஆகியவற்றில் முதலிடம் பெற்று 10 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். 17 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் ஸ்ரீ கிருஷ்ணன் 400 மீ ஓட்டம், 800 மீ ஓட்டம், 1500 மீ ஓட்டம் மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதல் இடம் பெற்று 15 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார்.

14 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மாணவன் சிபினேஷ் 400 மீ ஓட்டம், 600 மீ ஓட்டம், மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதலிடமும் 100 மீ ஓட்டத்தில் இரண்டாமிடமும் பெற்று 13 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். மேலும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் ஆஷிஷ் ராஜன், பரிக்சித் மகாதேவ், அபிலேஷ், ஆலன் பிரின்ஸ், 17 வயதுக்குட்பட்டோர் மாணவர்கள் பிரிவில் நகுல், ஜெயசூர்யா, அக்சயகுமரன், ஹரிஷ் பாபு ஆகியோர் தத்தமது போட்டிகளில் வென்றனர்.

மாணவிகள் பிரிவில் 14 வயதிற்குட்பட்டோரில் ஸ்ரீ நிதி மற்றும் சிஜிதா, 17 வயதிற்குட்பட்டோரில் கார்த்திகா ஆகியோரும் பங்கேற்ற போட்டிகளில் வெற்றி பெற்றனர். ஒட்டு மொத்தமாக 65 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடம் பெற்று ஸ்டஅக் ஹை டெக் பள்ளி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. போட்டிகளில் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் அஷ்வின் குமார் மற்றும் ராம்குமார் ஆகியோரை பள்ளி தலைவர் முருகன் தாளாளர் புனிதா செல்வி செயலாளர் ஆஷிஷ்லிங் மற்றும் முதல்வர் பிரவின் குமார் வாழ்த்தினர்.

அளவிலான பத்தாம் ஆண்டு விளையாட்டு போட்டிகள்கடந்த வாரம் மெரிட் கல்லூரி வைத்து நடைபெற்றது. இந்த போட்டிகளில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் இருந்து 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இடைகால் ஸ்டஅக் ஹை டெக் பள்ளி மாணவர்கள் இவற்றில் பங்கேற்று பள்ளிகளுக்கான ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வென்றனர்.

19 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் செல்வகுமார் நீளம் தாண்டுதல் மற்றும் மும்முறை தாண்டுதல் ஆகியவற்றில் முதலிடம் பெற்று 10 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார்.

17 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவன் ஸ்ரீ கிருஷ்ணன் 400 மீ ஓட்டம், 800 மீ ஓட்டம், 1500 மீ ஓட்டம் மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதல் இடம் பெற்று 15 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். 14 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மாணவன் சிபினேஷ் 400 மீ ஓட்டம், 600 மீ ஓட்டம், மற்றும் 4x100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றில் முதலிடமும் 100 மீ ஓட்டத்தில் இரண்டாமிடமும் பெற்று 13 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார். மேலும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் ஆஷிஷ் ராஜன், பரிக்சித் மகாதேவ், அபிலேஷ், ஆலன் பிரின்ஸ், 17 வயதுக்குட்பட்டோர் மாணவர்கள் பிரிவில் நகுல், ஜெயசூர்யா, அக்சயகுமரன், ஹரிஷ் பாபு ஆகியோர் தத்தமது போட்டிகளில் வென்றனர்.

மாணவிகள் பிரிவில் 14 வயதிற்குட்பட்டோரில் ஸ்ரீ நிதி மற்றும் சிஜிதா, 17 வயதிற்குட்பட்டோரில் கார்த்திகா ஆகியோரும் பங்கேற்ற போட்டிகளில் வெற்றி பெற்றனர். ஒட்டு மொத்தமாக 65 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடம் பெற்று ஸ்டஅக் ஹை டெக் பள்ளி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. போட்டிகளில் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் அஷ்வின் குமார் மற்றும் ராம்குமார் ஆகியோரை பள்ளி தலைவர் முருகன் தாளாளர் புனிதா செல்வி செயலாளர் ஆஷிஷ்லிங் மற்றும் முதல்வர் பிரவின் குமார் வாழ்த்தினர்.

## உடுமலையில்

# ஆர்.ஜி.எம். மெட்ரிக் பள்ளியில் கார்கில் வெற்றி தின ஊர்வலம்!

### மாணவர்கள் பங்கேற்பு!!



**உடுமலை,ஜூலை.30–**

திருப்பூர் மாவட்டம், உடுமலையில் கார்கில் வெற்றி தினத்தையொட்டி, உடுமலை ராஜலட்சுமி கெங்குசாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில், சிறப்பு நிகழ்ச்சி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

இதற்கு, பள்ளி முதல்வர் சகுந்தலா ரங்கராஜன் தலைமைதாங்கினார்சிறப்பு விருந்தினராக உடுமலை துணை போலீஸ் சூப்பிரண்டு தையல்நாயகி கலந்துகொண்டு கார்கில் வெற்றி தினத்தின் வரலாறு, ராணுவ வீரர்களின் வீரம், தியாகம் மற்றும் நாட் டுப்பற்றின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

இதையடுத்து கார்கில் போரின் நிகழ்வுகள் மற்றும் வீரர்களின் தியாகத்தை மவுனமொழி நாடகம் மூலம் மாணவர்கள் தத்ரூபமாக செய்து காட்டினார்கள்.

அதன் தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஊர் வலம் நடந்தது. உடுமலை மத்திய பஸ் நிலையத்தின் அருகில் தொடங்கிய ஊர்வலமானது பழைய பஸ் நிலையத்தில் உள்ள காமராஜர் சிலை முன்பு நிறைவடைந்தது. ஊர்வலத்தில் சென்ற மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியவாறு சென்றனர்.

இதில், போக்குவரத்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வீட்டுத் தோட்டம் மற்றும் காய்கறி சாகுபடியை ஊக்குவித்து, சத்தான உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் ஆடிப்பட்டத்தை முன்னிட்டு தோட்டக்கலைத் துறை சார்பில் கத்திரி, வெண்டை, கீரை உள்ளிட்ட 10 வகையான காய்கறி விதைகள் அடங்கிய ஆடிப்பட்ட தொகுப்பினை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்.

## ஆலங்குளம் அருகே

# கரும்புளியூத்தில் சாலை விபத்து 3 ஆம் வகுப்பு மாணவி சாவு!

### ரோட்டை கடந்த போது சம்பவம்!!

**தென்காசி, ஜூலை.30–**

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே தென்காசி – திருநெல்வேலி நான்கு வழிச்சாலையில் கரும்புளியூத்து பேருந்து நிறுத்தம் அருகே நேற்று மாலை நடைபெற்ற சாலை விபத்தில் 3ஆம் வகுப்பு மாணவி மரணமடைந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



கரும்புளியூத்து மெயின் ரோட்டைச் சேர்ந்த பீட்டர் என்பவரின் 8 வயது மகள் ஜீவிதா, மாறாந்தை தனியார் பள்ளியில் 3ஆம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்த அவர், கடைக்குச் சென்று விட்டு நான்கு வழிச்சாலையை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கடக்க முயன்றதாக கூறப்படுகிறது.

அப்போது தென்காசியிலிருந்து திருநெல்வேலி நோக்கி சென்ற தோஸ்த் சரக்கு வாகனத்தில் உள்ளிலோடு ஏற்றிச் சென்ற மதன் ராஜ்(19) என்பவர் ஓட்டி வந்த வாகனம் சிறுமி மீது மோதியது.

இந்த விபத்தில் சிறுமிக்கு தலையின் வலது பகுதியில் மற்றும் கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.தகவலறிந்து சம்பவ இடத்திற்குசென்ற ஆலங்குளம் காவல் ஆய்வாளர் சாகுல் ஹமீது தலைமை யிலான போலீசார், காயமடைந்த சிறுமியை உடனடியாக ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்தில் ஈடுபட்ட வாகனத்தையும் ஓட்டுநரையும் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை நடத்தினர்.

இந்த ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஜீவிதா, சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். முதற்கட்ட விசாரணையில், வாகனத்தை ஓட்டி வந்த மதன் ராஜுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவுசெய்துதொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆலங்குளத்தில்

# மாற்றுக்கட்சியினர் 200 பேர் த.வெ.க.வில் இணையும் விழா!



**ஆலங்குளம், ஜூலை.30–**

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் டி.பி.வி. மில் வளாகத்தில் நேற்று மாலை நடந்த நிகழ்ச்சியில் மாற்று கட்சியினர் த.வெ.க.வில் இணையும் விழா நடந்தது.

தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியம்,முக்கூடல் பேரூர் பகுதிகளிலிருந்து அ.தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினரும், மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜனதா காமராஜ் உட்பட பெண்கள் திரண்டு ஆலங்குளம் வந்தனர். சுமார் 200 மாற்று கட்சியைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் அவர்கள் அங்குள்ள டிபிவி மில் வளாகத்துக்கு சென்றனர்.

அங்கு தென்காசி தெற்கு மாவட்ட த.வெ.க. செயலாளர் டி.டி.வி. விபின் சக்கரவர்த்தி யை சந்தித்து அவரது தலைமையில் தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கடையம் மேற்கு ஒன்றிய செயலாளர் சங்கர் செய்திருந்தார். நிகழ்ச்சியில் அக்கட்சியின் மாவட்ட, ஒன்றிய நகர நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## உடுமலை அரசு கலைக்கல்லூரியில்

# போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது!

### மாணவர்கள் உறுதிமொழி ஏற்றனர்!!



**உடுமலை,ஜூலை.30–**

திருப்பூர் மாவட்டம், உடுமலை அரசு கலைக் கல்லூரியில், போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. இதில், போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம் என மாணவர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

போதை ஒழிப்பு தொடர்பாக, அரசு சார்பில் விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடத் தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், உடுமலை அரசு கலைக்கல்லூரி யில், போதைப்பொருட்கள் இல்லாத கல்வி வளாகத்தையும், ஆரோக்கியமான சமுதாயத்தையும் உருவாக்கும் நோக்கில், போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந் தது.

கல்லூரியின் போதைப்பொருள் தடுப்புக்குழு, நாட்டு நலப் பணித் திட்டம், தேசிய மாணவர் படை ஆகியவை சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் மலர்வண்ணன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, உடுமலை டி.எஸ்.பி. தையல் நாயகி பேசியதாவது:–

"போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் சட்டம், உடல்நலம் மற் குறித்தும், குறித்தும், போதைப் பொருள் இல்லாத தமிழ கத்தை உருவாக்குவதில் இளைஞர்களின்பங்குமுக்கியமானது. மாணவர்கள் போதைப் பொருள் பழக்கத்திலிருந்து விலகி இருப்பதோடு, ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் சமூகப்பொறுப்புணர்வுடன் வாழ வேண்டும்.

நீங்கள் மட்டுமின்றி தங்களை சுற்றியுள் ளவர்கள், பொதுமக் கள், பெற்றோர் என அனைத்து தரப்பினரிட மும் போதைப்பொருட்க ளால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள், குடும்ப நல பாதிப்பு மற்றும் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இளைய தலைமுறை போதை ஒழிப்பில், கவனம் செலுத்த வேண்டும். போதை ஒழிப்பில் அரசுடன் ஒருங்கிணைந்து, மாணவ சமுதாயம் பங்காற்ற வேண்டும். போதையில்லாதமிழகம் உருவாக அனைவரும் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

இவ்வாறு, டி.எஸ்.பி., பேசினார்.

தொடர்ந்து "போதைப்பொ ருள் இல்லாத வளாகம் ; போதைப் பொருள் இல்லாத தமிழகம்" உரு வாக்குவோம் என உறு திமொழி ஏற்றுக்கொண் டனர்.

## ஊத்தங்கரை அருகே

# அரசு டாஸ்மாக் கடையை மூட கோரி போராட்டம்!

### பெண்கள் முற்றுகை!!



**ஊத்தங்கரை, ஜூலை.30–**

ஊத்தங்கரை அடுத்த காட்டேரி கிராமத்தில் உள்ள அரசு டாஸ்மாக் கடையை திறக்கக் கூடாது என கிராம மக்கள் 50–க்கும் மேற்பட்டோர் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அடுத்த, காட்டேரி கிராமத்தில் இயங்கி வரும் அரசு டாஸ்மாக் மதுபானகடை கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வருகிறது. கடந்த மாதம் இந்த பகுதியில் விவசாய தோட்டத்தில் இருந்த மூதாட்டியை கல்லாவி பகுதியை சேர்ந்த போதை ஆசாமி மது போதையில் பாலியல் வன்புணர்வு செய்துதலைமறைவாய் இருந்தார். அவரைகாவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

அரசு டாஸ்மாக் மதுபான கடையை இந்த இடத்திலிருந்து மாற்றக்கோரி நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த கடையை இட மாற்றம் செய்யப் போவதாக போலீசார் மற்றும் டாஸ்மாக் நிர்வாகம் உறுதி அளித்ததின் பேரில் போராட்டம் கைவிட்டு பெண்கள் கலைந்து சென்றனர்.

உறுதியளித்து 40 நாட்களுக்கு மேலாகியும் கடையை மாற்றாததால் நேற்று காலை 12:00 மணி அளவில் கடையை திறக்க கூடாது என்று 50க்கும் மேற்பட்ட பெண்கள் அரசு டாஸ்மாக் மதுபான கடை அருகில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஊத்தங்கரை போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வராஜ் மற்றும் போலீசார் ஒரு வாரத்தில் கடை மாற்றப்படும் என உறுதி அளித்ததின் பேரில் பெண்கள் கலைந்து சென்றனர்.

## பழனி கோவிலுக்கு சொந்தமான

# ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் 4 பேர் கைது!

### சி.பி.சி.ஐ.டி. போலீசார் நடவடிக்கை!!

**சென்னை, ஜூலை.30–**

பழனி கோவிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது ஏற்கனவே 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான, சுமார் 100 கோடி ரூபாய் சந்தை மதிப்பு கொண்ட 1.40 ஏக்கர் மடத்து நிலத்தைப் போலி ஆவணங்கள் மூலம் முறைகேடாகப் பத்திரப்பதிவு செய்து அபகரிக்க முயற்சி நடந்தது. உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி, இந்த மடத்து நிலத்திற்கான 'தக்கார்' கோயில் செயல் அலுவலர் அல்லது இணை ஆணையர் தான் என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்றாகும்.

இருப்பினும், அனைத்து விதிமுறைகளையும் புறக்கணித்து, போலி வாரிசு மற்றும் உரிமை ஆவணங்களைக் கொண்டு அவசர அவசரமாகப் பத்திரப்பதிவு அரங்கேற்றப்பட்டதாகப் புகார் எழுந்தது.

இச்சம்பவம் தமிழக அரசியல் மற்றும் ஆன்மீக வட்டாரத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதை அடுத்து, வழக்கை விசாரணை செய்ய மாநில அரசு சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு உத்தரவிட்டது.

கடந்த 16ஆம் தேதி பதிவான முதல் தகவல் அறிக்கை வருமாறு:–

சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையைக் கையில் எடுத்து, கடந்த ஜூலை 16 ஆம் தேதி 4 முக்கிய நபர்கள் மீது அதிகாரப்பூர்வமாக முதற்கட்ட வழக்கைப் பதிவு செய்தனர். அதில் நிலத்தை விற்றதாகக் கூறப்படும் விழுப்புரம் முருகதாஸ், நிலத்தை வாங்கிய திருப்பூரைச் சேர்ந்த வெள்ளைத்துரை, நிலத்தை வாங்கிய பழனியைச் சேர்ந்த சேதுபதி, நீதிமன்ற உத்தரவையும் கோயில் நிர்வாக ஆட்சேபனையையும் புறக்கணித்து பத்திரப்பதிவு செய்ததாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட (கூடுதல் பொறுப்பு பழனி) சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் ஆகியோர் ஆவர்.

தொடர்ந்து 14 நாட்களாகப் பழனி சார்பதிவாளர் அலுவலகக் கோப்புகள், கணினித் தரவுகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளை ஆய்வு செய்த சி.பி. சி.ஐ.டி. போலீசார், நேற்று (29.07.2026) வழக்கில் தொடர்புடைய 4 முக்கிய பேரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களின் முழு விவரம் வருமாறு:–

வெள்ளைத்துரை (60): காளிமுத்து என்பவரின் மகன்; திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தாலுகா, பப்பன்குளம் பகுதியைச் சேர்ந்தவர். (முறைகேடான நிலத்தை வாங்கியவர்). முருகதாஸ் (56): தண்டபாணி அய்யா என்பவரின் மகன்; விழுப்புரம் மாவட்டம், சாலாமேடு, காமராஜர் நகர் 2வது குறுக்கு தெருவைச் சேர்ந்தவர். (கோயில் நிலத்தைத் தனது பெயரில் ஆவணம் செய்து விற்றவர்). அன்வர்தீன் (65): சாகுல் ஹமீது என்பவரின் மகன்; திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, கவுண்டன்குளம், ஏ.சி.சி. சாலை பகுதியைச் சேர்ந்தவர்.

கைதில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், இதுவரை வழக்கு விவரங்களிலோ அல்லது காவல்துறை விசாரணையிலோ பெயர் அடிபடாத பழனியைச் சேர்ந்த அன்வர்தீன் என்பவரைக் கைது செய்திருப்பதுதான். இவர் நில மோசடிக்குப் போலி ஆவணங்களை தயார் செய்யவும், அதிகாரிகளுக்கும் நிலத்திமிங்கலங்களுக்கும் இடையே இடைத்தரகராகச் செயல்பட்டுப் பத்திரப்பதிவை முடித்துக் கொடுக்கப் பின்னணியில் இருந்து இயங்கியதாகச் சி.பி. சி.ஐ.டி. தரப்பில் கூறப்படுகிறது.

நிலத்தை வாங்கியதாக கூறப்படும் மற்றொரு நபரான பழநி டி.கே.என்., புதூரைச் சேர்ந்த சேதுபதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள 4 நபர்கள் மீதும் புதிய பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் கீழ் பின்வரும் கடுமையான பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பி.என்.எஸ். 318(4): ஏமாற்றுதல் மற்றும் சொத்தைச் சட்டவிரோதமாகப் பறித்தல். பி.என்.எஸ். 336(3) & 340(2): போலி ஆவணங்களைப் புனைந்து தயாரித்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல். பி.என்.எஸ். 49 & 61(2): குற்றச் சதித் திட்டம் தீட்டுதல் மற்றும் சட்டவிரோதச் செயலுக்கு உடந்தையாக இருத்தல்.

இவ்வழக்கில் 5வது எதிரியாகச்சேர்க்கப்பட்டுள்ள சஸ்பெண்ட் செய்யப்பட்ட சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், உயர்நீதிமன்றத்தை அணுகி நிபந்தனை ஜாமீன் பெற்றுள்ளார். நீதிமன்ற உத்தரவுப்படி, அவர் வரும் 3 ம் தேதி வரை தினந்தோறும் சிபிசிஐடி விசாரணை அதிகாரிகள் முன் ஆஜராகிக் கையெழுத்திட்டு, விசாரணைக்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறார்.

கைது செய்யப்பட்டுள்ள 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காவலில் எடுத்து விசாரிக்கச் சி பி சி ஐ டி திட்டமிட்டுள்ளது.

## கோவை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு

# அனுமதி மறுத்த மத்திய அரசை கண்டித்து மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் போராட்டம்!

### வருமான வரித்துறை அலுவலகம் முற்றுகை!!




கோவை, ஜூலை.30–

கோவை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு அனுமதி மறுத்த மத்திய அரசை கண்டித்து, கோவை பந்தய சாலை அருகே உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம், மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் தலைவர் வே.ஈஸ்வரன் தலைமையில் நேற்று காலை நடைபெற்றது.

அப்போது அவர் கூறுகையில், மத்திய அரசு 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்துவதற்கு உகந்த நகரங்களாக இந்தியாமுழுவதும் உள்ள 18 மாநகரங்களுக்கு அனுமதி அளித்தது. அதில் கோவையும் ஒன்று. கோவைக்கு அடுத்த நிலையில் இருந்த கொச்சியில் மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்தப்பட்டு தற்போது மக்கள் பலனடைகின்றனர்.

கோவைக்கு மெட்ரோ ரெயில் திட்டம் அமல்படுத்துவோம் என்று 2024 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றிருந்தால் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு தகுதியான நகரமாக ஆகிவிடுமா?

கோவையை விட மக்கள் தொகையில் குறைந்த பரப்பளவில் குறைந்த பொருளாதார வளர்ச்சியில் குறைந்த வட மாநில மாநிலங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கோவைக்கு மெட்ரோ ரெயில் திட்டம் வந்தால் இந்தியாவின் மிகச் சிறந்த நகரமாக கோவை வளரும் கோவை வளர்ச்சியை தடை செய்யும் விதமாக மத்திய அரசின் அறிவிப்பு உள்ளது. இந்தியாவிற்கு மிகப்பெரிய அளவில் வருமான வரி ஈட்டி தருகின்ற கோவைக்கு இந்தத் திட்டத்தை தர மறுத்த மத்திய அரசை வன்மையாக கண்டிக்கிறோம்.

கோவை மாநகர வளர்ச்சிக்கு மாபெரும் துரோகம் செய்கிற மத்திய அரசை கண்டித்து மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பாக வருமான வரித்துறை அலுவலகம் முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துகிறோம் என்றார்.

## நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்:

# அரூர் சட்டமன்ற தொகுதியை பொது தொகுதியாக மறுசீரமைக்க வேண்டும்!

### கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தீர்மானம்!!




தர்மபுரி,ஜூலை.30–

தர்மபுரி கிழக்கு மாவட்டம் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாணவர் அணி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் மாநில இளைஞரணி செயலாளர் சூரியமூர்த்தி வடக்கு மண்டல செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் வழிகாட்டுதல்படி தர்மபுரி கிழக்கு மாவட்ட மாணவரணி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி செயலாளர் பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் தலைமை வகித்தார். மொரப்பூர் ஒன்றிய செயலாளர் மணி அரூர் தெற்கு ஒன்றிய தலைவர் ரவி அரூர் மேற்கு ஒன்றிய தலைவர் திருமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் செந்தில்முருகன்மாவட்ட செயலாளர் கே.பி. இளங்கோ மாவட்ட அவைத்தலைவர் பி.எம். இளங்கோ தலைமை நிலைய செயலாளர் நரசிம்மன் மாவட்ட துணைச் செயலாளர் சீனிவாசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவரணி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர்.

இதில் ஆடி 18தீரன் சின்னமலை நினைவு நாளை ஒவ்வொரு கிராமத்திலும் நிகழ்ச்சிகள்நடத்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும் ஒன்றிய நகர ஊராட்சிகளில் மாணவர் அணிக்கு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கவேண்டும்அனைத்து கிளைகளிலும் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து மாணவர் அணியில் சேர்க்க வேண்டும் தர்மபுரி மாவட்டத்தில் அரூர் சட்டமன்ற தொகுதி 1952முதல்தனிப் தொகுதியாக தொடர்ந்து இருந்து வருகிறது.

தனித் தொகுதியை பொது தொகுதியாக மறுசீரமைத்து அறிவிக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது இந்நிகழ்ச்சியில்தீரன்தொழிற்சங்க பேரவை கிளை செயலாளர் பிரபாகரன் அரூர் மேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் வினோத்குமார் நிர்வாகிகள் சுபாஷ் சசிகுமார் யுவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் அரூர் தெற்கு ஒன்றிய மாணவர் அணி செயலாளர் ராஜசேகர் நன்றியுரை ஆற்றினார்.



நீலகிரி மாவட்டம், கூடலூர் நாடு கனி சுற்றுப்புற பகுதிகளில் 12 வருடத்திற்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் பூத்துள்ளதால் அப்பகுதியில் சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இருந்த போதிலும் யானைகள் நடமாட்டம் உள்ளதால் சுற்றுலா பயணிகளை அனுமதிக்க வனத்துறையினர் அனுமதி மறுக்கப்படுகிறது.

## மேட்டுப்பாளையம் அருகே

# மின்வேலியில் சிக்கிய உயிரிழந்த காட்டு யானை!

### வனத்துறை விசாரணை!!



மேட்டுப்பாளையம்,ஜூலை.30–

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை வனச்ச ரகத்துக்கு உட்பட்ட அடர்ந்த வனப்பகுதியில் காட்டு யானை காட்டு எருமை சிறுத்தை புலி கரடி மான் காட்டுப்பன்றி செந்நாய் ஆகிய வனவிலங்குகளின் நடமாட்டம் காணப்படுகிறது.

அடர்ந்த வனப்பகுதியில் உணவு மற்றும் நீர் நிலைகளை தேடி அலையும் காட்டு யானை மற்றும் பிற வன விலங்குகள் இரவு நேரத்தில் வனப்பகுதியில் இருந்து வெளியேறி வனப்பகுதியை ஒட்டியுள்ள தோட்டங்களில் புகுந்து விவசாய விளை பொருள்களை நாசம் செய்து வருகிறது.

வனப்பகுதியில் வனவிலங்குகள் இடம்பெயர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன மேட்டுப்பாளையம் அருகே வேடர் காலணியில் குமார் என்பவர் தோட்டத்தை பாக்யராஜ் என்பவர் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று இரவு வனப்பகுதியில் இருந்து வெளியேறிய ஆண் காட்டு யானை ஒன்று இவரது தோட்டத்திற்குள் புகுந்தது அப்போது இவர் தோட்டத்தைச் சுற்றிலும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட உயர் அழுத்த மின்சார வேலியில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தது. இது குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதும் சிறுமுகை வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை செய்து வருகின்றனர்.

## ஈரோடு கொங்கு கல்லூரியில்

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

### உறுதிமொழி ஏற்றனர்!!



ஈரோடு,ஜூலை.30–

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியுடன் ஈரோடு மாவட்ட பொது சுகாதாரதுறை மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறையும் இணைந்து போதை பொருளை தவிர்ப்போம்என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை விழிப்புணர்வு விரிவுரை நிகழ்ச்சியைகல்லூரியில் நடத்தியது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மருத்துவர் கைலாசம், மருத்துவ அலுவலர்கள் ஆதிபராசக்தி, கலைச்செல்வி, மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு ஆலோசகர் கண்ணன் ,சுகாதார மேற்பார்வையாளர் கௌரிசங்கர், சுகாதார ஆய்வாளர்கள் ரகு, கோகுல், சங்கர், ஞானசேகர் ஆகியோர் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் உடல்நலம் சார்ந்த உளவியல் ரீதியான சமூக மற்றும் சட்ட ரீதியான விளைவுகள் குறித்து விரிவான மற்றும் பயனுள்ள உரையை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் போதை பொருளைதவிர்ப்போம் வாழ்க்கையை தேர்ந்தெடுப்போம் என்ற செய்தியை வலியுறுத்தும் விழிப்புணர்வு படக்காட்சி ஆகியவை இடம் பெற்றன. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி தாளாளர் சச்சிதானந்தன் மற்றும் முதல்வர் வாசுதேவன் அவர்களின் வழிகாட்டிதலின்படி போதைப்பொருள் எதிர்ப்பு மற்றும் கணிதத்துறை மூலமாக நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ஆலங்குளத்தில்

# ஜனநாயகன் திரைப்பட வெளியீடு கோலாகலம்!

### ரசிகர்கள் கொண்டாட்டம்!!




ஆலங்குளம், ஜூலை.30–

ஆலங்குளத்தில் ஜனநாயகன் திரைப்பட வெளியீடு கோலாகலம் பட்டாசு வெடித்து கேக் வெட்டி ரசிகர்கள் கொண்டாட்டம் நடிகர் விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' திரைப்படம் உலகம் முழுவதும் நேற்று வெளியானதை முன்னிட்டு, தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள டி.பி.வி. மல்டிபிளக்ஸ் திரையரங்கில் ரசிகர்கள் மற்றும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உற்சாகமாக கொண்டாடினர் முதல் நாள் முதல் காட்சியை முன்னிட்டு, தமிழக வெற்றி கழகத்தின் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் டி பி வி வி விபின் சக்கரவர்த்தி தலைமை தாங்கி முதல் காட்சினை தொடங்கி வைத்தனர் .ஏராளமான ரசிகர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் திரையரங்கில் திரண்டனர்.

இதையடுத்து பட்டாசுகள் வெடித்தும், கேக் வெட்டியும், இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது தொடர்ந்து ஊனமுற்றவர்களுக்கு 2 பேருக்கு மூன்று சக்கர சைக்கிள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து திரைப்பட வெளியீட்டை கொண்டாடினர். மேலும், நடிகர் விஜயின் கட்அவுட்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய ரசிகர்கள், உற்சாக முழக்கங்களை எழுப்பியபடி ஆரவாரத்துடன் கண்டு ரசித்தனர்.

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்:

# அழகர்கோவில் கள்ளழகர் கோவிலில் ஆடித்தேரோட்டம் கோலாகலம்!

### கோவிந்தா கோஷம் முழங்க வடம் பிடித்து இழுத்தனர்!!



அலங்காநல்லூர், ஜூலை.30–

அழகர்கோவிலில் ஆடிப்பெருந்பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான ஆடித்தேரோட்டம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா கோஷம் முழங்க வடம் பிடித்து இழுத்தனர்.

திருமாலிருஞ்சோலை தென் திருப்பதி என்று போற்றி புகழப்படும் அழகர்கோவிலில் உள்ள கள்ளழகர் கோவிலில் நடைபெறும்திருவிழாவில் மிகவும் பிரசித்தி பெற்றது இந்த ஆடி பெருந்திருவிழாவாகும்.இந்த விழா கடந்த 21ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அன்று இரவு அன்ன வாகனத்தில் கள்ளழகர் பெருமாள் எழுந்தருளி புறப்பாடு நடைபெற்றது.

22ம் தேதி காலையில் தங்க பல்லக்கிலும், இரவு சிம்ம வாகனத்தில் பெருமாள் புறப்பாடும்,23ம் தேதி காலையில் வழக்கம் போல் நிகழ்ச்சியும் அன்று இரவு அனுமார் வாகனத்திலும்,24ம் தேதி காலையில் வழக்கம்போல் நிகழ்ச்சியும் அன்று இரவு கருட வாகனத்திலும்,25ம் தேதி காலையில் 7.30 மணிக்கு மேல் 8.10மணிக்குள் சுந்தர்ராஜ பெருமாள் சிவகங்கை சமஸ்தானம் மறவர் மண்டபத்திற்கு தங்க பல்லக்கில் எழுந்தருளி திரும்பினார். அன்றிரவு சேஷ வாகனத்தில் சாமி புறப்பாடும்.26ம் தேதி காலையில் வழக்கம் போல் நிகழ்ச்சியும் அன்று இரவு மோகினி அவதாரத்தில் சாமி புறப்பாடும். பின்னர் யானை வாகனத்தில் பெருமாள் எழுந்தருளினார்.

27ம் தேதி இரவு புஷ்ப சப்பரத்தில் சாமி புறப்பாடு நடைபெற்றது. நேற்று இரவு குதிரை வாகனத்தில் சாமி புறப்பாடு நடைபெற்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டத்திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் அதிகாலை சுவாமி தேருக்கு எழுந்தருளினார். பின்னர் திருத்தேர் வடம் பிடித்தல் நடைபெற்றது. இதில் அனைத்து அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.இரவு புஷ்ப பல்லக்கும் நடைபெறும்.

மேலும் தொடர்ந்து அழகர்கோவில் கள்ளழகர் கோவிலில் உள்ள பதினெட்டாம்படி கருப்பண சாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடிப் பௌர்ணமி நிறை நாளன்று மாலையில் திருக்கதவுகள் திறக்கப்பட்டு 18 படிகளுக்கும் படி பூஜை செய்து தீபாராதனைகள் காண்பித்து கதவுகளுக்கு சந்தனம் சாத்துப்படியாவது வழக்கம்.அதேபோல் இந்த ஆண்டும் ஆடித் தேரோட்டத்தன்று மாலையில் பதினெட்டாம்படி கதவுகள் திறக்கப்பட்டு படி பூஜைகள் செய்து தீபாராதனைகள் காண்பித்து சந்தனம் சாத்துதல் நிகழ்ச்சி நடைபெறும்.

30ம் தேதி தீர்த்தவாரி நடைபெறும்.31ம் தேதி உற்சவ சாந்தி நடைபெறும்.இந்த வருடம் தேரோட்டத்திற்கு பிறகு ஆடி அமாவாசை வருகின்ற ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி புதன்கிழமை வருகிறது அன்று சாமி கருட வாகன புறப்பாடும் நடைபெறும்.தேரோட்ட பாதுகாப்பு பணியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கூட்ட நெரிசல்களை கட்டுப்படுத்த கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு தீயணைப்பு துறையினர், மருத்துவக் குழுவினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.இத்துடன் ஆடி பெருந்திருவிழா நிறைவு பெறுகிறது திருவிழா ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் ஹரிஹரன் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## கடுமையான வெயிலே காரணம்:

# புளியங்குடி அருகே மருதநாச்சியார்புரத்தில் வைக்கோல் படப்பில் பயங்கர தீ விபத்து!

### ரூ. பல லட்சம் மதிப்புள்ள வைக்கோல் எரிந்து நாசம்!!



புளியங்குடி,ஜூலை.30–

புளியங்குடி அருகே மருதநாச்சியார்புரத்தில் பல லட்சம் மதிப்புள்ள வைக்கோல் கட்டுகள் தீ பிடித்து எரிந்து சேதமடைந்தன.

வாசுதேவநல்லூர் வீரன்னன் தெருவை சேர்ந்தவர் கருப்பசாமி மகன் வெற்றி கண்ணன் (59). இவர் விவசாயி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறார். இவருக்கு பத்துக்கும் மேற்பட்ட மாடுகள் உள்ளது அதற்க்காக இவருக்கு சொந்தமான சுப்ரமணியபுரம் அருகில் உள்ள மருதநாச்சியார்புரத்தில் வைக்கோலை வாங்கி படப்பு போட்டு வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நான்கு மணி அளவில் வைக்கோல் படப்பில் தீ எரிவதாக, இவருக்கு தகவல் வந்தது. அங்கு இருந்தவர்கள் உதவியுடன் தீ அணைக்க முயன்றனர். காற்றின் வேகம் காரணமாக தீ வேகமாக பரவியது அதனை தொடர்ந்து தீ அணைப்புநிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது கடையநல்லூர், தென்காசி ஆகிய இடங்களில் இருந்து தீ அணைப்பு வண்டியில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வீரர்கள் விரைந்து வந்து போராடி தீ அணைத்து வருகின்றனர்.

இதில் அடுக்கி வைத்து இருந்த சுமார் 2000 கக்கும் மேற்பட்ட வைக்கோல் கட்டுகள் தீயில் எரிந்து சாம்பலாக்கியது. இதன் தோராய மதிப்பு 4 லட்சம் வரை இருக்கும் என்று கூறப்படுகிறது. தீ விபத்திற்கான காரணம் குறித்து புளியங்குடி இன்ஸ்பெக்டர் ஆடிவேல்; மற்றும் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்

இது பற்றி தீ அணைப்பு துறை அதிகாரிகள் கூறுகையில்இந்த மாதத்தில் வைக்கோல் தீ பிடிப்பது இரண்டாவது சம்பவம் இரு வாரங்களுக்கு முன்பு நெற்கட்டும் செவலில் இதுபோல் வைக்கோல் படப்பில் தீ எரிந்தது பொதுவாகவே வைக்கோல் எளிதில் தீ பிடிக்க கூடிய பொருள் ஆகவே படப்பு போடும் போது அதனை சுமார் நூறு நூறு கட்டுகளாக தனிதனியே கட்டி படப்பு போட வேண்டும்.

மேலும் ஒரு படப்பிற்கும் மற்றொரு படப்பிற்கும் சுமார் இருபது அடியாவது இடைவெளி விட வேண்டும். போதுமான இடம் இல்லாத காரணத்தினால் ஒரே இடத்தில் மொத்தமாக வைக்கோலை படப்பு போட்டு விடுகின்றனர். இதனால் தீ பிடிக்கும் பொழுது அனைத்து இடங்களுக்கும் பரவி விடுகிறது.

இதனால் தீ அணைக்க வீரர்கள் கடுமையாக போராட வேண்டியுள்ளது தற்போது பகல் நேரங்களில் கடுமையான வெயில் அடித்து வருகிறது. வைக்கோல் படப்பு அருகில் சிறிய கண்ணாடி போன்ற பொருள் இருந்தால் கூட வெயில் காரணமாக தீ பிடிக்க காரணமாகிறது. ஆகவே விவசாயிகள் கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

### மானாமதுரையில்

# ஆனந்தவல்லி – சோமநாதர் கோவில் ஆடித்தபசுத் திருவிழா கோலாகலம்!

## ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்!!



**மானாமதுரை, ஜூலை.30–**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் நடைபெற்று வரும் ஆடித்தபசுத்திருவிழாவையொட்டி ஆனந்தவல்லி அம்மனுக்கு சோமநாதர் சுவாமி விருஷாபரூடராகக்காட்சி தரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தக் கோவிலில் ஆடித்தபசுத் திருவிழா கடந்த 18ஆம் தேதி தொடங்கியது. இதன் முக்கிய நிகழ்வாக தபசு உத்ஸவத்தை முன்னிட்டு, கோவில் மண்டபத்தில் பிரியாவிடை சமேத சோமநாதர் சுவாமி ரிஷப வாகனத்தில் எழுந்தருளினார். கோவிலுக்கு முன் தபசுக் கோலத்தில் ஆனந்த வல்லி அம் மன் எழுந்தருளினார்.

தீபாராதனை காட்டப்பட்டதும், சோமநாதர் சுவாமி புறப்பாடாகி கோவிலுக்கு வெளியே வந்து ஆனந்தவல்லி அம்மனுக்கு விருஷாபரூடராகக் காட்சி தந்து அவரது தபசுக் கோலத்தை களைந்தார். அப்போது, திருமணத் தடை நீங்க இளம் பெண்கள் வாங் கிக் கொடுத்த மலர் மாலைகள் அம்மனுக்கும், சுவாமிக்கும் மாற்றப்பட்டு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன.

ராஜேஷ்பட்டர், ஆனந்த் சிவம் பட்டர், குமார் பட்டர் உள்ளிட்ட சிவாசாரியர்கள் ஆடித்தபசு உத்ஸவத்துக்கான சடங்குகளை நடத்தினார்கள். பின்னர், கால்பிரவு கிராமத்தார் மண்டகப்படியில் இரு ரிஷப வாகனங்களில் ஆனந்த வல்லியும், பிரியாவிடை சமேத சோமநாதர் சுவாமியும் சர்வ அலங்காரத்தில் எழுந்தருளி அருள் பாலித்தனர். மண்டகப் படிதாரர்கள்பூஜைமுடிந்து அம்மனும், சுவாமியும் வீதி உலா வந்தனர்.

### தேனியில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் சிறப்பு கூட்டம்!

## 630 மனுக்கள் பெறப்பட்டன!!



**தேனி, ஜூலை.30–**

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் வைத்திநாதன் தலைமையில் நடந்தது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 630 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட கலெக்டர், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

இந்நிகழ்விற்கு முன்னதாக, மாவட்ட கலெக்டர் மாற்றுத்திறனாளி களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், தனித்துணை ஆட்சியர் கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின்கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வெடி விபத்தில் உயிரிழந்த

# 4 பேரின் குடும்பத்தினருக்கு ரூ.16 லட்சத்திற்கான காசோலை!

## அமைச்சர்கள் நேரில் வழங்கினார்கள்!!



**விருதுநகர், ஜூலை.30–**

விருதுநகர் மாவட்டம், செங்கமலப்பட்டியில் நடந்த வெடி விபத்தில் உயிரிழந்த 4 நபர்களின் குடும்பத்தினருக்கு ரூ.16 லட்சத்திற்கான காசோலைகளை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் கீர்த்தனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி ஆகியோர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கினார்கள்.

தமிழ்நாடுமுதலமைச்சர் ச.ஜோசப் விஜய் உத்தரவின்படி, அமைச்சர்கள் கீர்த்தனா, ஜெகதீஸ்வரிஆகியோர் விருதுநகர் மாவட்ட ஆட்சியர்அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா, எம்.எல்.ஏ.க்கள் செல்வம், கார்த்திக் ஆகியோர் முன்னிலையில், விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், செங்கமலப்பட்டியில் கடந்த 26.07.2026 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த 4 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர்பொது நிவாரண நிதியாக தலா ரூ.4.00 லட்சம் வீதம் மொத்தம் ரூ.16 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்கள்.

அதன்படி, இந்த வெடி விபத்தில் உயிரிழந்த சிவகாசி வட்டம் செங்கமலப்பட்டியைச் சேர்ந்த ராம்பிரகாஷ் என்பவரது வாரிசுதாரரான பூமாரி என்பவருக்கும், இன்னாசி முத்து என்பவரது வாரிசுதாரரான ஜெயலட்சுமி என்பவருக்கும், ராமச்சந்திரன் என்பவரது வாரிசுதாரரான லட்சுமி என்பவருக்கும், சிவகாசி வட்டம் நாரணாபுரத்தைச் சேர்ந்த பாண்டித்துரை என்பவரது வாரிசுதாரரான தமிழரசி என்பவருக்கும் என மொத்தம் 4 நபர்களுக்கு தலா ரூ.4 லட்சம் வீதம் மொத்தம் ரூ.16 லட்சம் மதிப்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை அமைச்சர்கள் வழங்கி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதலையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி, தனித்துணை ஆட்சியர் மோகனா, அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

### பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## கண்டன கோஷம் எழுப்பினார்கள்!!




**திருமங்கலம், ஜூலை.30–**

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை கலைந்து திருத்திய அரசாணை வெளியிட வலியுறுத்தி தமிழக முதல்வர் கவனத்தை ஈர்த்திடும் வகையில் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தினர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராஜாஜி சிலை அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை அரசே ஏற்று நடத்த வேண்டும். அனைவருக்கும் கட்டணம் இல்லா சிகிச்சை முறையினை உத்தரவாதப்படுத்த வேண்டும் எந்த சிகிச்சைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு என்பதில் வெளிப்படுத்தன்மையில்லை எனவும் இது ஓய்வூதியர்களின் பணத்தைப் பறிக்கும் ஆபத்தான வழிமுறையாக உள்ளது.

இதை அரசு சீரமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அரசின் இந்த புதிய முறைக்கு கண்டனம் தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக்கிளி தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார்.

வட்டக்கிளை துணைத் தலைவர் சுசில்குமார் அனைவரையும் வரவேற்றார், வட்டக்கிளை செயலாளர் கணேசன் கோரிக்கை தொடர்பாக விளக்கவுரை அளித்தார்.

மாவட்ட தலைவர் பரமேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார். மாவட்ட துணை தலைவர் ராஜேந்திரன் தமிழ்நாடு அனைத்து சத்துணவு அமைப்பு ஓய்வூதியர் சங்க ஒன்றிய செயலாளர் மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்டக்கிளை பொருளாளர் பாஸ்கரன் நன்றி தெரிவித்தார்.

### வேடசந்தூர் அருகே

# சொகுசு காரில் கடத்தி வந்த 284 கிலோ குட்கா பறிமுதல்!

## காரில் வந்தவர் தப்பி ஓட்டம்!!



**வேடசந்தூர், ஜூலை.30–**

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் பாலகுமாரசாமி, எஸ்.பி.தனிப்பிரிவு போலீசார் குமார் உள்ளிட்ட போலீசார் கரூர் திண்டுக்கல் நான்கு வழி சாலையில் காசிபாளையத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது அவ்வழியாக சந்தேகத்திற்கு இடமாக வேகமாக வந்த சொகுசு காரை போலீசார் தடுத்து நிறுத்தினர்.

போலீசாரை பார்த்ததும் காரில் இருந்தவர் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கி வருவது போல் நடித்து போலீசார் அசந்தபோது அங்கிருந்து மின்னல் பதில் தப்பி ஓடி சென்று விட்டார்.

பிறகு ஸபோலீசார் காரை சோதனை மேற்கொண்ட போது காரில் மூட்டை, மூட்டையாக அரசால் தடை செய்யப்பட்ட 284 கிலோ குட்கா இருப்பது தெரியவந்ததை தொடர்ந்து போலீசார் குட்கா மற்றும் காரை பறிமுதல்செய்துஇதுகுறித்துகூம்பூர்போலீஸ்நிலையத்திற்கு கொண்டு வந்து இதுகுறித்து வழக்கு பதிவு செய்து காரில் வந்து தப்பி ஓடியவரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

### இளையான்குடி பேரூராட்சி கூட்டம்

# குப்பை கிடங்கிற்கு நிரந்தர தீர்வு காண அ.தி.மு.க. கவுன்சிலர் கோரிக்கை!

## சாலைகளை சீரமைக்கவும் வலியுறுத்தல்!!



**மானாமதுரை, ஜூலை.30–**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி கூட்டம் தலைவர் நஜூமுதீன் தலைமையில் நடந்தது. செயல் அலுவலர் கவிதா முன்னிலை வகித்தார். துணைத் தலைவர் இப்ராஹிம் வரவேற்றார். கூட்டத்தில் நடந்த விவாதங்கள்,

நாகூர் மீரா அ.தி.மு.க., கவுன்சிலர்: இளையான்குடி பேரூராட்சியில் குப்பை கிடங்கு பிரச்னை பெரிதாகும் நிலையில் ஏற்கனவே கிராம கணக்கில் குப்பை கிடங்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிதாக குப்பை கிடங்கு அமைக்க மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். விரைவில் நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கவுன்சிலர் ராஜவேலு சிலர்: இளையான்குடி பேரூராட்சி புதிய பஸ் ஸ்டாண்ட் செயல்படும் இடத்திற்கு பேரூராட்சி சார்பில் உரிய நில மதிப்பு தொகை செலுத்தப்பட்டதாகவும், செலுத்தப்படாமல் உள்ளதாகவும் முரண்பட்ட தகவல் வருகிறது இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

ஜலாலுதீன் (சுயே): எனது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய்கள் பதிப்பதற்காக தோண்டப்பட்ட ரோடுகள் சீரமைக்கப்படாமல் உள்ளது. இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும். செயல் அலுவலர் கவிதா: கவுன்சிலர்களின் கோரிக் கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். முன்னதாகதலைமை அலுவலர் கணேசன் தீர்மானங்களை வாசித்தார். துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை நன்றி கூறினார்.

கூட்டத்தில் பேரூராட்சி கவுன்சிலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் அருகே

# தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் இரட்டை மாட்டு வண்டி எல்கைப்பந்தயம்!

## 24 ஜோடி பங்கேற்பு; பார்வையாளர்கள் உற்சாகம்!!



**திருப்பத்தூர், ஜூலை.30–**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே காரையூர் புதுவளவு கிராமத்தார்கள், தமிழ்நாடு ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவை சார்பில் 3ஆம் ஆண்டு மாட்டு வண்டி எல்கைப்பந்தயம் நடைபெற்றது.

திருப்பத்தூர் – சிங்கம்புணரி சாலையில் நடைபெற்ற இந்த மாட்டுவண்டிப் பந்தயத்தில் பெரிய மாடு பிரிவில் 9 ஜோடிகளும், சின்னமாடு பிரிவில் 15 ஜோடிகளும் என 24 ஜோடி மாடுகள் பங்கேற்றன. பெரியமாட்டுக்கு 8 கி.மீ. தூரமும் சின்னமாட்டுக்கு 6 கி.மீ தூரமும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இப்போட்டியில் சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மதுரை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. போட்டியில் மாடுகள் சிறீ பாய்ந்து சென்று ஒன்றை ஒன்று முந்தி சென்று பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில்வெற்றிபெற்றமாட்டு வண்டியின் உரிமையாளர்களுக்கும், அதனை ஓட்டி வந்த சாரதிகளுக்கும் விழா குழுவினர் சார்பில் ரொக்கம் மற்றும் கோப்பை, கேடயம், தட்டுவண்டி மெத்தை, டீசர்ட், மெடல், அலங்கார மேசை முதலியவை பரிசாக வழங்கப்பட்டன.

விழாவுக்கான ஏற்பாடுகளை காரையூர் புதுவளவு இளைஞர்கள், பொதுமக்கள், தமிழ்நாடு ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவையினர் செய்தனர். இந்த மாட்டுவண்டி பந்தயத்தினை சாலையின் இருபுறங்களில் நின்று ஏராளமான ரசிகர்கள் உற்சாகத்தோடு கண்டு களித்தனர்.

### விருதுநகரில்

# மின் கசிவு காரணமாக பஞ்சாலையில் தீ விபத்து!

## ரூ.பல லட்சம் சேதம்!!



**விருதுநகர், ஜூலை.30–**

விருதுநகர் பேராலி சாலையில் உள்ள பஞ்சாலையில் மின் கசிவினால் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் மற்றும் பஞ்சு பொதிகள் எரிந்து சேதமாயின.

விருதுநகர் அல்லம்பட்டி பகுதியை சேர்ந்தவர் மாரியப்பன். இவருக்கு சொந்தமான பஞ்சாலை பேராலி சாலையில் உள்ளது. இதில், 50 கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வழக்கம் போல் பணியாற்றிக் கொண்டிருந்தனர். நேற்று பிற்பகல் மின்கசிவு காரணமாக திடீர் தீ விபத்து ஏற்பட்டது. உடன் அங்கிருந்து தொழிலாளர்கள் தப்பி ஓடினர்.

தகவலறிந்த தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த விபத்தில் இயந்திரங்கள் பஞ்சு மூட்டைகள் உட்பட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதமாகின. இதுகுறித்து விருதுநகர் ஊரக காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

### திருவாரூரில் பரபரப்பு சம்பவம்:

# பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட சித்த மருத்துவர் கைது!

## நாகை கிளை சிறையில் அடைப்பு!!

**திருவாரூர், ஜூலை.30–**

திருவாரூரில் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட மருத்துவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

திருவாரூர் தாலுகா காவல்சரகத்திற்கு உட்பட்ட பவித்திரமாணிக்கம் மெயின்ரோட்டில் சித்த மருத்துவம் மற்றும் வர்ம மருத்துவம் பார்க்கும் கிளினிக் நடத்தி வருபவர் இலவங்கார்குடி காமராஜ் நகர் பகுதியை சேர்ந்த சரவணன் (வயது 52) சித்தமருத்துவரான இவரது கிளினிக்கிற்கு நேற்று கொடிக்கால்பாளையம் பகுதியைசேர்ந்த 30 வயது இளம்பெண் தனக்கு தொடர்ந்து வாந்திமயக்கம் ஏற்படுவதாக மருத்துவரிடம் நேற்று சென்று பார்த்து பேசியுள்ளார்.

அதற்கு மருத்துவர் சரவணன் வர்மக்கலை செய்வதாககூறி அந்த பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனை இளம்பெண் தட்டிக்கேட்டதால் மருத்துவர் திட்டி மிரட்டியதாக தெரிகிறது. இதையடுத்து அங்கிருந்து தாலுகா காவல் நிலையத்திற்குச் சென்று தன்னிடம் பாலியல்சீண்டலில் மருத்துவர் ஈடுபட்டதாக கூறி அந்த இளம்பெண் புகார் அளித்தார். புகாரினை பெற்றுக்கொண்ட போலீசார் சம்பவஇடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டதில் இளம் பெண் கூறியது உண்மை என நிரூபிக்கப்பட்டதால் மருத்துவர் சரவணன் மீது வழக்கு பதிவுசெய்தது டன் கைது செய்து நேற்று நாகை கிளைசிறையில் அடைத்தனர் சித்த மருத்துவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு கைதான சம்பவம் திருவாரூரில் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

Ooratchi Malar Multilingual Daily is Printed and Published by M.PANDIARAJAN on behalf of PS Publications, Printed at SRI SAAI PRINTERS, No.100/120, old Post Office Building, Justice Rajasekaran Street, Weekly Market Road, Sivagangai - 630561. and Published from PS Publications 141, Gandhi Road, Sivagangai - 630561. Editor. M.PANDIARAJAN Email : ooratchimalar@gmail.com www.ooratchimalar.com